**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 299/2019 P.W.8/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சோனியா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. பிரேம் சாலமன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் 04.03.2013 அன்று ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் அவசர சிகிச்சை மருத்துவராக பணியில் இருந்த போது மதியம் சுமார் 12.10 மணியளவில் அழகம்பாறையை சேர்ந்த திருமதி சோபியா என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவர் தன்னை அன்றைய தினம் காலை சுமார் 06.00 மணியளவில் அவரின் வீட்டில் வைத்து தெரிந்த நபர் கையினால் தாக்கியதாக கூறினார்.

2. நான் அவரை பரிசோதித்து பார்த்த போது அவருடைய கீழ் வெட்டுப்பல் உடைந்து இருந்தது. சிகிச்சைக்கு பின் அவர் வார்டுக்கு மாற்றப்பட்டார். X–ray மற்றும் CTScan எடுக்கப்பட்டது. பல் மருத்துவர் சிகிச்சை அளித்தார். அதன்படி அவருடைய பல் எண் 41 காணவில்லை. பல் எண் 42 நிலையாக இல்லை. அவர் 09.03.2013 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மேற்கண்ட காயம் கொடியகாயம் என்று சான்றழித்துள்ளேன். மேற்படி **காயச்சான்று Ex.P4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

1. நான் வழங்கிய காயச்சான்றிதழில் Simple Injury என எழுதி அதில் திருத்தம் செய்து Grevious Injury என எழுதப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். பல் மருத்தவர் கருத்துரையின் பேரில் Grevious Injury என சான்றிதழ் கொடுக்கப்பட்டது. பல் மருத்துவர் கருத்துரை வழங்கியதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், அது மருத்துவ பதிவேடுகளில் உள்ளது, அதனை பார்த்து தான் நான் இந்த கருத்துரையை வழங்கினேன்.

2. பொதுவாக ஒரு நபர் கீழே விழுந்து அதில் மேற்படி பல் உடைந்து கீழே விழ வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு உள்ளது. காயம்பட்ட நபருக்கு வேறு எந்த காயங்களும் இல்லை என்றால், சரிதான்.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.